සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව

சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

Sabaragamuwa Provincial Department of Education

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 11 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 11
First Term Test - 2016 | Grade 11

*ව්‍යාපාර හා ගිණුම් කරණ අධ්‍යයනය 11*
*வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் 11*
*Business and Accounting Studies 11*

*පැය දෙකයි*
2 மணித்தியாலம்
*Two hours*

பெயர்/பரீட்சை இல :-

……..……………………………………………………………………………………….

*கவனத்திற்கு :*

- முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக.

(01) கீழ்வரும் தகவல்களைக் கொண்டு 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

வணிகப் பின்னனியைக் கொண்ட குடும்பத்தில் ஒருவரான சம்பத் என்பவர் ரூபா 100 மில்லியன் பெறுமதியான தனது தேயிலை தொழிற்சாலையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். அவரின் கீழ் இரு முகாமையாளர்களும் 80 ஊழியர்களும் கடமை புரிவதோடு ரூபா 5 மில்லியன் மதிப்புடைய பஸ் சேவை வணிகத்தையும் நடாத்திச் செல்கிறார். அவர் தனது பிரதேச மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதோடு தரமான உற்பத்திகளை சந்தைப்படுத்துவதே அவரது நோக்கமாகும். அப்பிரதேசத்தில் மேலும் இரு தேயிலை தொழிற்சாலை இயங்கினாலும், தனது தேயிலை தொழிற்சாலையை வெற்றியுடன் நடாத்தி செல்கிறார். சிறந்த மூலப்பொருட்களையும் நவீன தொழல்நுட்ப இயந்திரங்களையும் பயன்படுத்தி “ஹெலபிம தேயிலை” என்ற பெயரில் தனது உற்பத்தியினை சந்தைப்படுத்துகிறார்.

(1) மேற்குறிப்பிட்ட தகவலுக்கு ஏற்ப இது எவ்வகை வணிக அமைப்பாகும்?
(2) இவ்வகை வணிக அமைப்பின் 03 அம்சங்களைத் தருக.
(3) உற்பத்தி சேவை வணிகத்திற்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.
(4) இவ்வணிகத்தின் உரிமையாளரின் பலங்கள் 02 இனைத் தருக.
(5) வணிகத்தின் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியைக் கணிக்குக.
(6) இவ்வணிகத்தின் இரு நோக்கங்களைத் தருக.
(7) இவ்வணிகத்திற்க ஏற்படக்கூடிய பிரதான அச்சுறுத்தல் எது?
(8) இவ்வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்தல் அவசியமா? உமது விடைக்கான காரணம் தருக.
(9) இவ்வணிகத்தின் பெயரினை எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்?
(10) இவ்வணிகம் தமது தேயிலை உற்பத்தியினை ஏற்றுதி செய்வதால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யும் இரு காரணிகளைத் தருக.

(2x10= 20புள்ளிகள்)

**பகுதி 01**

(02) (1) வணிக சூழலானது அகச்சூழல், புறச்சூழல் என வகைப்படுத்தப்படுகிறது. இவ்விரு சூழலிலும் அடங்கும் காரணிகள் இரண்டு வீதம் தருக.

(2) வணிகத்தின் இரு பலங்களையும் இரு பலவீனங்களையும் தருக.

(3) பொருளாதார சூழலானது கட்புலனாகா சூழலாகும். இச்சூழலில் உள்ளடங்கும் துணை காரணிகள் 3னைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(4) (a) உடமை அடிப்படையில் வணிகத்தின் வகைகளைத் தருக.

(b) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்?

(5) கூட்டுறவு சங்கத்தின் 03 பிரதான அம்சங்களைத் தருக.

(03) (1) (a) ''காசோலை'' என்பதால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விபரிக்குக.
(b) காசோலையுடன் தொடர்படைய 03 தரப்பினரைக் குறிப்பிடுக.
(2) காசோலைகளைப் புறக்குறிப்பிடல் என்றால் என்ன? காசோலைக் குறுக்கிடப்படும் இரு சந்தர்ப்பங்களைத் தருக.
(3) போக்குவரத்தின் நான்கு அடிப்படை மூலங்களை இவ்விரண்டு உதாரணத்துடன் தருக.
(4) நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாடு அதிகரிக்கும் இக்காலக்கட்டத்தில் இலத்திரனியல் தொடர்பாடல் முறைகள் 03 தருக.
(5) ஆயுள் காப்புறுதிக்கும் ஆதன காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

(04) (1) நிலையான சேமிப்பு வைப்பிற்கும், சேமிப்பு வைப்பிற்கும் இடையிலான 03 ஈவறுபாடுகளைத் தருக.
(2) வணிக நடவடிக்கைகளில் போக்குவரத்து பங்களிப்ப செய்யும் 03 முறைகளைத் தருக.
(3) முகாமையாளர் ஒருவரின் கடமைகள் 4 இனைத் தருக.
(4) பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் முகாமை கருமங்களைத் தருக.
(a) சந்தைப்படுத்தல் முகாமையாளருடன் சந்திப்பு.
(b) தொழிற்சார் தகைமை விருத்திக்காக பயிற்சி விட்டங்களை ஏற்படுத்தல்.
(c) தரக்கட்டுப்பாட்டு பிரிவினரால் ஆடைகள் தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படல்.
(d) வணிகத்திற்கு ஏற்ப வணிக சூழலின் அமைவிடத்தை ஏற்படுத்தல்.
(e) தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துதல்.

## பகுதி 02

(05) நிமாசா பாடசாலை காகிதாதி விற்பனை நிலையமொன்றை நடாத்தி செல்கிறார். அவரது முதல் நாள் கொடுக்கல் வாங்கல் வருமாறு.
(a) ரூபா 200 000 மூலதனம் இடப்பட்டது.
(b) ரூபா 75 000 பெறுமதியான மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது.
(c) ரூபா 100 000ற்கு வியாபார இடமொன்று கொள்வனவு செய்யப்பட்டது.
(d) ரூபா 25 000 காகிதாதிகள் கொள்வனவு செய்யப்பட்டது.
(e) ரூபா 50 000 பெறுமதியான வங்கிக் கடன் ஒன்று பெறப்பட்டது.

(1) கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் இறுதி விளைவுகளைப் பதிந்து காட்டுக.

| கொடுக்கல் வாங்கல் | சொத்து = | மூலதனம் + | பொறுப்புகள் |
|---|---|---|---|
| (a)<br>(b) | | | |

(2) இக்கொடுக்கல் வாங்கல்களை காசேடு, பேரேட்டில் பதிந்து பரீட்சை மீதியினை தயாரிக்குக.

(06) ரமேஸ் நிறுவனத்தின் 30.09.2015 திகதி காசேட்டு வங்கி கணக்கு மீதி ரூபா 10 500 ஆகும். இது அவ்வணிக வங்கி கணக்கு மீதியுடன் பின்வரும் காரணங்களால் இணங்கவில்லை.
- ரூபா 12 000 பெறுமதியான காசோலை செப்டம்பர் மாதம் வைப்பிலிடப்பட்டும் இன்னும் தீர்வையாகவில்லை.
- ரூபா 8 500 பெறுமதியான காசோலைகள் பிறப்பிக்கப்பட்டு கொடுப்பனவிற்காக இதுவரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.
- வங்கிக் கட்டணம் ரூபா 500ம் நிலையியற் கட்டளை கொடுப்பனவு ரூபா 2 000ம் காசேட்டு வங்கி கணக்கில் பதியப்படாமை.
- கடன் படுநர் ஒருவரால் ரூபா 3 500 நேரடி வைப்பிலிடப்பட்டது.

தயாரிக்க வேண்டியவை.

(a) 30.09.2015 ற்கான சீராக்கப்பட்ட வங்கி கணக்கு.
(b) 30.09.2015 ற்கான வங்கி இணக்க கூற்று.

(07 )31.12.2015 ம் திகதியிலான உதார வியாபாரத்தின் பரீட்சை மீதி வருமாறு.

| பேரேட்டு கணக்குகள் | வரவு | செலவு |
|---|---|---|
| காசேடு | 56 000 | |
| தொலைப்பேசி கட்டணம் | 5 000 | |
| விற்பனைக் கணக்கு | | 300 000 |
| கொள்வனவு கணக்கு | 150 000 | |
| வங்கி கடன் கணக்கு | | 200 000 |
| மூலதன கணக்கு | | 400 000 |
| காணி கட்டிட கணக்கு | 500 000 | |
| பற்று கணக்கு | 34 000 | |
| தளபாட உபகரண கணக்கு | 130 000 | |
| வட்டி வருமான கணக்கு | 10 000 | |
| தொங்கல் கணக்கு | 15 000 | |
| | **900 000** | **900 000** |

பரீட்சை மீதியின் வரவு செலவு நிரல்கள் சமப்படாமை அத்தொகை தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டது. அவ்வேறுபாட்டுக்கான காரணங்கள் வருமாறு.

- மின்சார கட்டண கணக்கு மீதியான ரூபா 16 000 பரீட்சை மீதியில் பதியப்படாமை.
- வட்டி வருமானம் கணக்கு மீதி பரீட்சை மீதியின் வரவு பக்கத்தில் பதிவழிக்கப்பட்டுள்ளது.
- வங்கி கடன் மீள செலுத்தலுக்கான ரூபா 30 000 காசேட்டில் மட்டும் பதிவழிக்கப்பட்டுள்ளது.
- கொள்வனவு கணக்கு மீதி ரூபா 130 000 பரீட்சை மீதியில் தவறாக ரூபா 150 000 என பதியப்பட்டிருந்தது.
- பற்று கணக்கு மீதி ரூபா 43 000 தவறாக ரூபா 34 000 என பதியப்பட்டுள்ளது.

தயாரிக்க வேண்டியது,

(1) வழுக்களை சீராக்கம் செய்வதற்கான நாட்குறிப்பேட்டு பதிவுகள்

(2) தொங்கல் கணக்கு.

The National e-learning Portal for The General Education